# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஜூலை 29, 2023 | Weekly E-paper ● July 29, 2023




# பழுப்பு நிலக்கரி பற்றி எரிகிறது!

சுப. வீரபாண்டியன்

## மோடியால் முடங்கும் நாடாளுமன்றம்!

சாரததேவி

## “யாதும் ஊரே யாவரும் கேளிர்” –பேசுவாரா அண்ணாமலை?

தலையங்கம்

## சமூக நீதியை வலியுறுத்தும் “கழுவேத்தி மூர்க்கன்”

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஜூலை 29, 2023 Weekly E-paper ● July 29, 2023


# பழுப்பு நிலக்கரி பற்றி எரிகிறது!

சுப. வீரபாண்டியன்

நெய்வேலி நிலக்கரி பட்டென்று பற்றி எரிகிறது. பா.ம.க.வின் தலைவர்களில் ஒருவரான அன்புமணியின் பேச்சு, அனலினும் சூடாய்க் கொதிக்கிறது. என்ன நடக்கிறது நெய்வேலியில்?

என்எல்சி நிர்வாகம், விவசாயிகளின் விளை நிலங்களைப் பறித்துக் கொள்கிறது என்பது குற்றச்சாட்டு. அதனை எதிர்த்து நெய்வேலி நுழைவாயிலில் அன்புமணி தலைமையில் முற்றுகைப் போராட்டம் நடத்தினர் பாமகவினர். அவர்களைக் காவல்துறை கைது செய்த போது, ஒரு கலவரம் உண்டானது. அன்புமணியை ஏற்றிச் சென்ற காவல் ஊர்தியை, அக்கட்சியின் தொண்டர்கள் மறித்தனர். வாகனத்தின் மீது கற்களை வீசித் தாக்கினர். எதிர் வினையாகக் காவல்துறை தடியடி நடத்தியது. இருதரப்பிலும் காயங்கள் ஏற்பட்டன.

அனல் மின் நிலைய விரிவாக்கத்திற்காக நிலங்கள் கையகப்படுத்தப் படுகின்றன. ஆனால் அது இப்போது தொடங்கவில்லை. 2006 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

2006 ஆம் ஆண்டு ஒரு ஏக்கருக்கு இரண்டரை லட்சம் ரூபாயும், பிறகு 2013 ஆம் ஆண்டு அதே ஒரு ஏக்கருக்கு 6 லட்ச ரூபாயும், இப்போது 25 லட்ச ரூபாயும் கொடுக்கப்பட்டு நிலங்கள் கையகப்படுத்தப் பட்டுள்ளன. மக்களின் ஒப்புதலோடுதான் இது தொடர்ந்து நடைபெற்று இருக்கிறது. ஆனால் இறுதியாக கையகப்படுத்திய நிலங்களை, என்எல்சி நிர்வாகம் உடனே எடுத்துக் கொள்ளாததால், அந்த நிலங்களை விளை நிலங்களாக விவசாயிகள் மாற்றி உள்ளனர்.

அவை விளைநிலங்கள் என்றாலும், ஏற்கனவே நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான ஈட்டுத்தொகையையும் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலங்கள் அவை என்பதை மறந்து விடக்கூடாது.

இப்போது பா.ம.க. களத்தில் இறங்கி சட்ட ஒழுங்குப் பிரச்சினையை உருவாக்குகிறது. அன்புமணி தன் பேச்சில்,



இனிமேல் கடலூர் மாவட்டத்தில் எதுவும் அசையாது என்று கூறுகிறார். அவருடைய பேச்சு மென்மேலும் வன்முறையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

பொதுமக்களில் ஒரு பகுதியினர், இப்போது 25 லட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை தரப்படுகிறது. ஆனால் எங்களுக்கு ஆறு லட்சம் தான் கிடைத்தது. எனவே இன்னொரு 19 லட்சம் ரூபாயை ஒவ்வொரு ஏக்கருக்கும் தர வேண்டும் என்கின்றனர்.

பாமகவினரோ நிலக்கரி மூலம் மின்சாரம் தயாரிப்பதை நிறுத்திவிட்டு, என்எல்சி நிர்வாகம் வெளியேறட்டும் என்கிறார்கள். நீர் மின்சாரம், சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் ஆகியனவே சரியாக இருக்கும் என்பது அவர்களின் கருத்து.

அண்ணாமலை நடைப்பயணம் தொடங்கும் அதே நாளில், அன்புமணி முற்றுகைப் போராட்டம் நடத்தி இருக்கிறார். காலையில் கைது செய்யப்பட்ட அன்புமணி மாலையில் விடுவிக்கப் பட்டிருக்கிறார்.

நம் நாட்டில் எல்லாவற்றுக்குள்ளும் ஓர் அரசியல் உண்டு. இதற்குள் இருக்கும் அரசியல் என்ன என்பது இன்னும் சில நாள்களில் புரிந்துவிடும்.

●

# மோடியால் முடங்கும் நாடாளுமன்றம்!

சாரதாதேவி

இந்தியப் பாராளுமன்றத்தின் பருவமழைக்காலக் கூட்டத்தொடர் 20.07.2023 வியாழன் அன்று தொடங்கியது. 26 எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்பில் “ I.N.D.I.A” என்ற வலுவான கூட்டணி நாடாளுமன்றத்தில் மணிப்பூர் கலவரம் உள்ளிட்ட முக்கிய பிரச்சனைகளை எழுப்பி விவாதிக்கத் தயாரானார்கள்.

நாடாளுமன்றம் கூடியதும் இந்திய ஒன்றியத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த மணிப்பூர் கலவரம் குறித்து விவாதிக்க விதி 267 இன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரக் கோரினார்கள் எதிர்க்கட்சியினர்.

தொடக்கத்தில் மறுத்ததாலும், அவை நடவடிக்கைகள் தொடர்ந்து முடங்குவதாலும் பா.ஜ.க அரசுக்கு ஏற்படும் நெருக்கடியைச் சமாளிக்க, விதி 176 இன் கீழ் மணிப்பூர் விவகாரம் பற்றி விவாதிக்கலாம் என்று இறங்கி வந்தார் அமித்ஷா.



விதி எண் 267 என்பது அவையின் அனைத்து அலுவல்களையும் ஒதுக்கி, ஒத்தி வைத்துவிட்டு காலவரையின்றி விவாதங்கள் நடக்க வழி செய்கிறது. விதி 176 என்பதன் கீழ் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு, மூன்று மணி நேரம் மட்டுமே விவாதம் நடத்த முடியும்.

எதிர்க்கட்சிகள் அதை ஏற்கவில்லை. பிரதமரே நேரில் அவைக்கு வந்து அறிக்கை வைக்க வேண்டும். அதன்பின் 267 ஆம் விதியின் கீழ் விவாதிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

மணிப்பூர் கலவரம் நாட்டையே உலுக்கி இருக்கிறது. மணிப்பூரில் குக்கி இனப் பெண்கள் நிர்வாணப் படுத்தப்பட்டு, கூட்டு வன்புணர்வு செய்யப்பட்ட காணொளிகள் கசிந்த அடுத்த சில நாட்களிலேயே பாராளுமன்றம் கூடியது.

மணிப்பூரில் கலவரம் தொடங்கி 82 நாட்கள் ஆகிவிட்டன. 140க்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாகி உள்ளன. 300க்கும் மேற்பட்ட தேவாலயங்கள், கோயில்கள் கொளுத்தப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. 60000 பேர்களுக்கும் மேல் மக்கள் வீடுகளை விட்டு அப்புறப் படுத்தப்பட்டு, அகதிகளாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாணவர்களின் கல்வி நிறுத்தப்பட்டுள்ளது.

இணையம் செயல்பட தடை விதித்து கடந்த 3 மாதங்களாக அங்கே நடந்த கொடுமைகளை வெளி உலகிற்குக் காட்டாமல் மறைத்துள்ளார்கள்.

நாட்டின் பிரதமரோ, நீரோ மன்னனுக்கு சற்றும் குறைவில்லாத அலட்சியத்துடனும், மாய உலகில் இருப்பது போலவும், ஆஸ்த்ரேலியா, அமெரிக்கா, எகிப்து, பிரான்ஸ் என நாடுநாடாகச் சுற்றிக்கொண்டும்; விருதுகளும், விருந்துகளும், அனுபவித்துக் கொண்டு இருந்திருக்கிறார். இதில் இவர் பிற நாடுகளுக்கெல்லாம் நம் ஜனநாயகம் இரத்தத்திலும் நரம்புகளிலும் இருப்பதாகப் பீற்றிக்கொண்டும் உலா வருகிறார்.

மெய்த்தி இனப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என ஒரு புரளியைக் கிளப்பி, அந்த முகாந்திரத்தின் அடிப்படையில் குக்கி இன மக்கள் மீது கட்டற்ற வன்முறையை ஏவச் செய்திருக்கிறது மணிப்பூர் அரசு. கிட்டத்தட்ட குஜராத்தைப் போன்ற ஒரு திட்டமிட்ட இன அழிப்பை அவர்கள் அரங்கேற்றி உள்ளதாகவே நாம் சந்தேகப்படும்படி இருக்கிறது.

தங்கள் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள அவகாசம் கொடுத்தது போல, வன்முறை வெடித்து, 25 நாள்கள் கழித்து அந்த மாநிலத்துக்குச் சென்ற உள்துறை அமைச்சர் அமித்ஷா அங்குகலவரத்தைக் கட்டுப்படுத்த ஒன்றுமே செய்யவில்லை. இந்த வேளையில் நாடாளுமன்றம் கூடியது.

பிரதமர் அவைக்கு வருவதில்லை. எதிர்க்கட்சிகளின் முழக்கங்களை ஒடுக்குவதும், காங்கிரஸ் உறுப்பினர் கார்கேவின் ஒலிவாங்கியை அணைப்பதும், ஆம்ஆத்மி உறுப்பினர்களை தற்காலிகத் தகுதி நீக்கம் செய்வதுமான நடவடிக்கைகளை அங்கே பார்க்கிறோம்.

இவ்வளவு அமளிகளிலும் ஒரு வாரத்தில், தேசிய பல் மருத்துவ ஆணைய மசோதா, தேசிய செவிலியர் ஆணைய மசோதா, அரசியலமைப்பு (பட்டியல் சாதிகள்) சட்டத் திருத்த மசோதா என மூன்று புதிய மசோதாக்கள் அறிமுகம் செய்யப் பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், பல்வேறு மாநிலங்களின் கூட்டுறவு வங்கி மசோதா, வனப் பாதுகாப்பு மசோதா என மாநிலங்களின் உரிமைப் பறிப்பு மசோதாக்கள் மட்டும் நிறைவேற்றப் பட்டுள்ளன.

இதில் பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில் பாதிக்கப்பட்ட பெண்கள் குறித்துப் பேசவேண்டும் என்றும், ராகுல் காந்தி அவர்கள் மணிப்பூருக்குச் சென்று ஏதோ வன்முறையைத் தூண்டியது போன்றும் பழிமாற்றல் வேலைகளையும் செய்து தன் கலக்கத்தையும், கீழ்த்தரமான தன் கோர அரசியல் முகத்தையும் ஒரு சேர இந்த நாட்டு மக்களுக்கும், உலகத்தாருக்கும் காட்டியுள்ளது ஆளும் பா.ஜ.க. அரசு. ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## "யாதும் ஊரே யாவரும் கேளிர்" –பேசுவாரா அண்ணாமலை?

மக்களிடம் அரசியல் பேசினால் அவர் அரசியல்வாதி. அரசியலைப் போல ஓர் 'அரை'சியலைப் பேசினால், அவரைத் தமாஷ் பேர்வழி என்று தான் சொல்ல வேண்டும்.

அந்த வேலையை என் மண், என் மக்கள் என்று சொல்லிக் கொண்டு கச்சிதமாகச் செய்கிறார் அண்ணாமலை.

இராமேஸ்வரத்தில் இருந்து என் மண், என் மக்கள் என்ற நடை பயணத்தை உள்துறை அமைச்சர் அமித்ஷா தொடங்கி வைக்க, அண்ணாமலை நடக்க ஆரம்பிக்கிறார். என்ன நோக்கத்திற்காக இந்த நடை பயணம்? ஒன்று தி.மு.க ஊழலுக்கு எதிராகவாம்! இரண்டாவது, மோடியை மூன்றாம் முறையாகப் பிரதமராக்கவாம்!

சொத்திற்கும், ஊழலுக்கும் வித்தியாசம் தெரியாமல் தி.மு.க வின் ஊழல் என்று DMK File 1 ஐ வெளியிட்டார் அண்ணாமலை. அது புஸ்வாணமாகப் போக, அவர் மீதே வழக்கு போட்டு விட்டார்கள் தி.மு.க வினர்.

அ.இ.அ.தி.மு.க வின் முன்னாள் அமைச்சர்கள், குட்கா விலிருந்து அரசு ஒப்பந்தப் பணி வரையும் செய்த ஊழல்களை ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக்காட்டியும் கூட, நம்ம அண்ணாமலை அதைப் பற்றிப் பேசுவதே இல்லையே. பா.ஜ.க வின் ஊழல் பற்றியும் பேசுவது இல்லையே, ஏன்?

என் மண், என் மக்கள் என்று சொல்லும் அண்ணாமலை, இந்திய ஒன்றியத்தை என்மண், என்மக்கள் என்றுதான் சொல்கிறார்.

அப்படியானால் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழர் நெறியை மேடையில் பேசும் மோடியின் பேச்சின் அடிப்படையில் மணிப்பூர் மக்களைப் பற்றி, அங்கு நிகழ்ந்த கொடுமைகள் பற்றி நடை பயணத்தில் பேசுவாரா, அண்ணாமலை?

ஒன்பது ஆண்டுகால மோடியின் ஆட்சியில் டீசல், பெற்றோல் போன்ற அத்தியாவசிய பொருள்களின் விலை ராக்கெட் வேகத்தில் உயர்ந்தது. பண மதிப்பிழப்பு என்றும், இல்லையில்லை அதைத் திரும்பப் பெறுகிறோம் என்றும் சொன்னது மோடி அரசு அல்லவா! டில்லியில் நடந்தது பஞ்சாப் விவசாயிகளின் போராட்டம்.

இவைகளைப் பற்றியெல்லாம் நடைபயணத்தில் பேசி மோடியை மூன்றாம் முறையாகப் பிரதமராக ஆக்குவாரா அண்ணாமலை.

காந்தியடிகளின் தண்டி யாத்திரை மக்களிடம் எழுச்சியை உருவாக்கியது. ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை நடைபயணத்தை மக்கள் வரவேற்றார்கள். அந்த நடை பயணங்கள் மக்கள் நலம் சார்ந்து இருந்தன.

மோடியை மீண்டும் பிரதமர் ஆக்கப் புறப்பட்டு விட்ட அண்ணாமலையின் நடைபயணத்தில் சொல்லக் கூடிய வகையில் எந்தவொரு நோக்கமும் இல்லை, மக்கள் பற்றிய சிந்தனையும் அதில் இல்லை, அவ்வளவுதான்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## திராவிட நட்புக் கழகம், பொறுப்பாளர்கள் நியமனம்



தலைவர்:
**ஆ. சிங்கராயர்.**

துணைத் தலைவர்கள் :
**Fr. தனிஸ்லாஸ்,**
**சிறீவித்யா.**

பொருளாளர்:
**தீபன்.**

பொதுச் செயலாளர்:
**இளஞ்சித்திரன்.**

து.பொ. செயலாளர்கள்:
**விஜயராணி,**
**தாம்பரம் இளங்கோ.**


மண்டலச் செயலாளர்கள்:
**ஆனந்த்,**
**கன்னியாகுமரி.**

**அஜீஸ் ரஹ்மான்,**
**ராணிப்பேட்டை.**

**ஆரோக்கியசாமி,**
**கும்பகோணம்.**

**கணியூர் பழ.முருகேசன்,**
**மடத்துக்குளம்.**

**- சுப.வீரபாண்டியன்**
நிறுவனர்



# சமூக நீதியை வலியுறுத்தும் "கழுவேத்தி மூர்க்கன்"

## வெற்றிச்செல்வன்




ஜாதியை மையமாக வைத்து அண்மைக் காலமாகத் திரைப்படங்கள் அதிக எண்ணிக்கையில் வெளிவந்தாலும், நடைமுறை சார்ந்த பார்வையுடன் ஜாதி என்னும் சமூகச் சிக்கலை அணுகும் படங்கள் வெகு சிலவே. அந்த வரிசையில் 'கழுவேத்தி மூர்க்கன்' சரியான முறையில் இச்சிக்கலைப் பேசியுள்ளது.

இருவேறு ஜாதிகளைச் சேர்ந்த, ஆனால் ஜாதி கடந்த ஆழமான நட்பினை விவரிப்பதோடு தொடங்கும் படம், அந்நட்பு ஜாதியின் காரணமாக எவ்வாறு சிதைகிறது என்பதைக் காட்சிப்படுத்தியுள்ளதுதான் கழுவேத்தி மூர்க்கன். அரசியல் பேசும் படத்தில், சொல்ல வந்த கருத்தைச் சுவாரஸ்யம் குறையாமல் எடுத்துள்ள இயக்குநரின் திறன் பாராட்டத்தக்கது.

"கல்வி ஒன்றே உன்னை உயர்த்தும்" என்ற அண்ணல் அம்பேத்கரின் வரிகளைக் காட்டும் காட்சியிலேயே நிமிர்ந்து உட்கார வைத்து விடுகிறார் இயக்குநர். மீசை என்பது வெறும் மயிர்தான் என்பது போன்ற வசனங்கள் ஜாதி ஆணவத்திற்கு மட்டும் அன்று, ஆணாதிக்கத்திற்கும் நெத்தியடி.

ஜாதியின் பெயரால் கட்சி வளர்க்கிறார் படத்தின் வில்லன். கட்சி வளர்ப்பதற்கு ஜாதியைப் பயன்படுத்துவதில் எந்த ஜாதியும் விதிவிலக்கு இல்லை என்று காட்டியிருப்பது நேர்மையான முயற்சி. நமது சமூகத்தில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரு ஜாதிய அடையாளம் பூசப்படுகிறது. ஆனால் ஜாதிய மோதல்களுக்குப் பின்னே தனிப்பட்ட பிரச்சினைகள் தொடக்கமாக இருக்கும் என்ற உண்மை நமது சிந்தனைக்கு உரியது.




ஒடுக்கப்பட்ட மக்களும் தங்களுக்குக் கீழ் அடுக்கில் உள்ளவர்களிடம் வேற்றுமை பாராட்டுவதை இயக்குநர் தொட்டுக் காட்டியிருப்பது முக்கியமான புள்ளி. தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் படங்களும், பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் புத்தகங்களும் நாயகனின் நண்பன் பூமியின் வீட்டின் இடம்பெற்றிருப்பதைக் காண்பிக்கும் காட்சி நாம் யாரைக் கொண்டாட வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

நீதிமன்றங்களில் உண்மை பேசாததால் நீதிமன்றங்களையே புறக்கணிக்கும் கதாபாத்திரம், சாமானியர்களுக்கு நீதி இன்னும் எட்டாக்கனிதான் என்ற உண்மையை விளங்க வைக்கிறது. கடனைத் திருப்பித் தராதவர்களுக்குத்தான் வங்கிகள் கடன் தருகின்றன, எளிய மக்களுக்கான நிறுவனங்களாய் அவை இருப்பதில்லை என்பதை முகத்தில் அறைந்தாற் போல சொல்கிறது ஒரு காட்சி. *Get out* என்று சொல்லி விட்டு அவர் போயிட்டார் என்ற நகைச்சுவைக் காட்சி, அண்மையில் அரசியல் கோமாளி ஒருவர் செய்த செயலை நினைவூட்டிச் சிரிப்பை வரவழைக்கிறது.

அதே நேரம், ஊருக்கே வழிகாட்டிய பூமியின் மரணத்தில், அவனால் முன்னுக்கு வந்த மாணவர்கள் செய்யும் நினைவஞ்சலி கண்களில் நீரை வரவழைக்கிறது. கதாநாயகிக்கு வழக்கமான தமிழ்த் திரைப்பட நாயகியின் பாத்திரம். அவ்வப்போது முகம் காட்டுவது.

பெரியார் மண்ணில் ஜாதி ஒழிந்து விட்டதா என்பது சனாதனிகளின் வழக்கமான கேள்வி. ஜாதி ஒழியவில்லை; ஆனால் ஜாதி, ஜாதியால் நேரிடும் சிக்கல்கள் தமிழ்நாட்டில் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது; ஜாதியைத் தாண்டிய நட்பும், உறவும் அதிகரித்து வருகிறது. ஜாதி மறுப்புத் திருமணங்கள் அதிகரித்து வருகின்றன. மற்ற மாநிலங்களில் ஜாதிக்கு ஒரு கட்சி இயங்கும்போது, தமிழ்நாட்டில் தி.மு.க., அ.தி.மு.க. என்னும் இருபெரும் கட்சிகள் அனைத்து ஜாதிகளையும் உள்ளடக்கியதாக வளர்ந்துள்ளன. இவை அனைத்திற்கும் காரணம் நூறாண்டுகளாக இங்கு இயங்கும் பார்ப்பனரல்லாதார் அரசியலே.

ஜாதிச் சிக்கல்களைப் பேசும் கழுவேத்தி மூர்க்கன் போன்ற திரைப்படங்களின் வருகை சமூகநீதியை முன்னிறுத்தும் தமிழ்ச் சூழலை வலிமையாக்குகிறது. இத்தகைய திரைப்படங்கள் அதிகம் வெளிவர வேண்டும்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian